


**12.12.2024**

தலைப்புச் செய்திகள்

1. ஊரக மகளிரின், ஜல்ஜீவன் நீர் மேலாண்மை இயக்கம், இன்றியமையா பங்கு வகிப்பதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி பாராட்டியுள்ளார்.

2. சாலை விபத்துகளில் பாதிக்கப்பட்டவர்களுக்கு பணமில்லா சிகிச்சை முறை திட்டம் விரைவில் நடைமுறைப்படுத்தப்படும் என்று மத்திய அமைச்சர் திரு. நிதின்கட்கரி தெரிவித்துள்ளார்.

3. பாகிஸ்தான் கடற்டையினரால் சிறைபிடிக்கப்பட்ட தமிழக மீனவர்களை மீட்க தூதரக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக வெளியுறவு துறை அமைச்சர் டாக்டர் **S.**ஜெய்சங்கர், முதலமைச்சருக்கு கடிதம் எழுதியுள்ளார்.

4. தமிழகத்தில் பருவமழையை அரசு தொடர்ந்து கண்காணித்து வருவதாக மாநில பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் திரு. **KKSSR** ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

5. சாத்தனூர், பூண்டி நீர்த்தேக்கங்களிலிருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளதால் கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖

பிரதமர்

ஜல்ஜீவன் நீர் மேலாண்மை இயக்கம் மகளிர், குறிப்பாக ஊரக மகளிர் ஆளுமையில், இன்றியமையா பங்கு வகிப்பதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி பாராட்டியுள்ளார்.

இல்லங்களின் வாயிலில் பாதுகாப்பான குடிநீர் கிடைப்பதை உறுதிசெய்யும் இந்த திட்டம் திறன் மேம்பாடு மற்றும் சுயசார்பு நடவடிக்கைகளில் பெண்கள் தனிகவனம் செலுத்தி, வளர்ச்சி பெற வழிகோலுவதாக சமூக வலைதளப்பதிவில் கூறியுள்ளார்.

❖❖❖❖❖❖❖

ஜெய்சங்கர்

இதனிடையே பிரதமர் திரு. நரேந்திரமோடி ஐக்கிய அரபு அமீரகத்தின் வெளியுறவு அமைச்சர் ஷேக் அப்துல்லா பின் சையதுடன், புதுதில்லியில் இன்று பேச்சுவார்த்தை மேற்கொள்கிறார்.

15-வது இந்திய ஐக்கிய அரபு அமீரக கூட்டுக்குழு ஆணைய கூட்டத்தில் பங்கேற்க இந்தியா வந்துள்ள ஷேக் அப்துல்லா மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் S.ஜெய்சங்கருடனும் இருதரப்பு பேச்சுவார்த்தை மேற்கொள்ளவுள்ளார்.

❖❖❖❖❖❖❖

நாடாளுமன்றம்

**பல்வேறு பிரச்சனைகளில் அமளி காரணமாக** நாடாளுமன்ற இரு அவைகளும் இன்று பிற்பகல் 2 மணிவரை ஒத்திவைக்கப்பட்டன.

மாநிலங்களவை இன்று கூடியதும், எதிர்கட்சிகளின் ஒத்திவைப்பு நோட்டீசை அவைத்தலைவர் திரு. ஜக்தீப்தன்கர் நிராகரிக்கவே அதனை எதிர்த்து எதிர்கட்சியினர் முழக்கமிட்டனர்.

அப்போது குறுக்கிட்ட அமைச்சர் திரு.ஜே.பி. நட்டா அவை தலைவரை கேள்வி கேட்கவோ, விமர்சிக்கவோ முடியாது என்று கூறினார்.

இது தொடர்பாக எதிர்கட்சித்தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கேயின் நடவடிக்கைக்கு அவர் கண்டனம் தெரிவித்தார்.

அவைத்தலைவர் பதவிக்கு காங்கிரஸ் கட்சி அவதூறு ஏற்படுத்துவதாக குற்றம் சாட்டினார்.

நாடாளுமன்ற நடைமுறைகளை காங்கிரஸ் மதிப்பதில்லை என்றும், காங்கிரஸ் தலைவர்கள் மற்றும் அமெரிக்க நிறுவனத்திற்கு இடையே உள்ள தொடர்பை திசை திருப்பும் வகையிலேயே காங்கிரஸ் உறுப்பினர்கள் இவ்வாறு நடந்து கொள்வதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

இதனிடையே ஆளுங்கட்சி உறுப்பினர்கள் அவையின் கவனத்தை திசைத்திருப்ப முயல்வதாக திரு. மல்லிகார்ஜுன கார்கே குறை கூறினார்.

இதுதொடர்பாக ஆளுங்கட்சி மற்றும் எதிர்கட்சி உறுப்பினர்களிடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டதால் நிலவிய அமளி காரணமாக அவைத்தலைவர் பிற்பகல் 2 மணி வரை மாநிலங்களவையை ஒத்திவைத்தார்.

**மக்களவையிலும் இதே நிலைமை** எதிரொலித்ததால் அவை பிற்பகல் 2 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

❖❖❖❖❖❖❖

கிரிராஜ் சிங்

**இதனிடையே காங்கிரஸ் மூத்த தலைவர்கள்** அமெரிக்க நிறுவனத்திற்கு இடையே தொடர்பு இருப்பதாக கூறப்படுவது குறித்து காங்கிரஸ் கட்சி தெளிவு படுத்த வேண்டும் என்று மத்திய அமைச்சர் திரு. கிரிராஜ் சிங் வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்ற வளாகத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், இவ்விஷயத்தில் காங்கிரஸ் உறுப்பினர்கள் தகுந்த விளக்கம் அளிக்க வேண்டும் என்றும் கோரினார்.

❖❖❖❖❖❖❖

**நிதின்கட்கரி**

சாலை விபத்துகளில் பாதிக்கப்பட்டவர்களுக்கு பணமில்லா சிகிச்சை முறை திட்டம் விரைவில் தொடங்கப்படும் என்று மத்திய சாலை போக்குவரத்து நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு. நிதின்கட்கரி தெரிவித்துள்ளார்

மக்களவையில் கேள்வி நேரத்தின் போது இதனை தெரிவித்த அவர், மருத்துவமனைகளில் ஒன்றரை லட்சம் ரூபாய் வரையிலும், சாலை விபத்துக்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிக்க இத்திட்டம் வகை செய்வதாக கூறினார்.

6 மாநிலங்களில் நடைமுறையில் உள்ள இந்த திட்டம், விரைவில் உத்தரபிரதேசத்திலும், அதனைத் தொடர்ந்து நாட்டின் இதரப்பகுதிகளுக்கும் விரிவுபடுத்தப்படும் என்றார்.

தமிழகம், உத்திரபிரதேசம், மஹராஷ்டிரம், மத்திய பிரதேச மாநிலங்களில் அதிக சாலை விபத்துக்கள் ஏற்படுவதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖

**ஜெய்சங்கர் – மீனவர்கள்**

பாகிஸ்தான் கடற்டையினரால் சிறைபிடிக்கப்பட்ட தமிழக மீனவர்களை மீட்க தூதரக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக வெளியுறவு துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

முதலமைச்சருக்கு அவர் இன்று எழுதியுள்ள கடிதத்தில், சிறைபிடிக்கப்பட்டுள்ள தமிழகத்தை சேர்ந்த 7 மீனவர்கள் உட்பட 14 இந்திய மீனவர்களை முன்கூட்டியே விடுவிக்கவும், அவர்கள் தாயகம் திரும்புவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் விரைவில் மேற்கொள்ளப்படும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பாக முதலமைச்சர் மத்திய அமைச்சருக்கு கடிதம் எழுதியிருந்தது குறிப்பிடத்தக்கது.

❖❖❖❖❖❖❖

**முதலமைச்சர்**

**சமூகம் மற்றும் பொருளாதார வளர்ச்சியில்** தமிழகம் சிறப்பான முன்னேற்றம் அடைந்திருப்பதாக முதலமைச்சர் திரு.முக.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

கேரள மாநிலம் வைக்கத்தில், தந்தை பெரியார் நூற்றாண்டு நிறைவு விழாவில் இன்று உரையாற்றியஅவர், இந்த வரலாற்று நிகழ்வில் பங்கேற்பது குறித்து பெருமிதம் தெரிவித்தார்.

முன்னதாக புனரமைக்கப்பட்ட பெரியார் நினைவகம் மற்றும் நூலகத்தை இன்று திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் முதலாவது வைக்கம் விருதை கர்நாடக எழுத்தாளர் தேவனூர மகாதேவாவிற்கு முதலமைச்சர் வழங்கினார்.

கேரள முதலமைச்சர் திரு. பிணராயி விஜயன் இதில் பங்கேற்றார்.

இரு மாநில முதலமைச்சர்களும் முல்லை பெரியாறு அணை பிரச்சனை குறித்து இன்று பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

❖❖❖❖❖❖❖

**ராமச்சந்திரன்**

**தமிழகத்தில் பருவமழையை அரசு தொடர்ந்து** கண்காணித்து வருவதாக மாநில பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் திரு. **KKSSR** ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்

ஸ்ரீவில்லிபுத்தூரில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், பொதுமக்கள் மற்றும் மாணாக்கர் பாதிக்காத வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖

**வானிலை**

**வங்ககடலில் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதி** அடுத்த 12 மணிநேரத்தில் வலுவிழக்க வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து இதன் இயக்குநர் திரு.செந்தாமரை கண்ணன்

.. **வாய்ஸ்** ..

இந்நிலையில் தமிழக மழை நிலவரம் குறித்து எமது சிறப்பு செய்தியாளர் ஜாய் தரும் செய்தித் தொகுப்பு

.. **வாய்ஸ்** ..

❖❖❖❖❖❖❖

**அணைகள்**

**காஞ்சிபுரம் மாவட்டம் செம்பரம்பாக்கம் ஏரி மழை நீரால்** வேகமாக நிரம்பி வருகிறது.

தொடர்மழை காரணமாக ராணிப்பேட்டை மாவட்டத்தில் 145 ஏரிகள் நிரம்பி உபரிநீர் வெளியேற்றப்பட்டு வருகிறது.

**திருவள்ளூர் மாவட்டம் பூண்டி ஏரியிலிருந்து உபரிநீர் இன்று** திறந்து விடப்பட்டுள்ளதால் கொசஸ்தலை ஆற்றில் முதல்கட்ட வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நம்பாக்கம் கிருஷ்ணாபுரம், தாமரைபாக்கம் மடியூர் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள மக்கள் பாதுகாப்பாக இருக்குமாறு நீர்வளத்துறை அறிவித்துள்ளது.

**கனமழை காரணமாக திருவண்ணாமலை மாவட்டம்** சாத்தனூர் அணைக்கு நீர்வரத்து தொடர்ந்து அதிகரித்துள்ளதால் அணையிலிருந்து வினாடிக்கு 13 ஆயிரம் கனஅடி தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது.

திறந்துவிடப்படும் நீரின் அளவு அதிகரிக்கப்படும் என்பதால் தென்பெண்ணை ஆற்றங்கரையோர மக்களுக்கு வெள்ளஅபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேட்டூர் அணைக்கு நீர்வரத்து இன்று வினாடிக்கு 4 ஆயிரத்து 727 கனஅடியாக சரிந்துள்ளது.

அணையின் நீர்மட்டம் 117.04 அடியாகும்.

**சென்னையில் கனமழை காரணமாக** திருவனந்தபுரம், கொல்கத்தா, சிலிபுரி உள்ளிட்ட இடங்களுக்கு இயக்கப்படும் 6 விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

**பெரம்பலூர் மாவட்டத்தில் மின்சாரம் தொடர்பான** அனைத்து புகார்களுக்கும் **94987 94987** என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என்று ஆட்சித்தலைவர் திருமதி. கிரேஸ் பச்சாவ் தெரிவித்துள்ளார்.

**வேலூர் மாவட்டத்தில் நீர்நிலைகளுக்கு அருகில்** குழந்தைகள் செல்வதை பெற்றோர் தடுக்க வேண்டுமென மாவட்ட நிர்வாகம் கேட்டுக் கொண்டுள்ளது.

**தூத்துக்குடியில் கடல்காற்று காரணமாக 3 ஆயிரத்திற்கும்** மேற்பட்ட படகுகள் கரையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**இந்நிலையில் திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தில்** நடைபெறவிருந்த பருவத்தேர்வுகள் கனமழை காரணமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

மயிலாடுதுறை, சீர்காழி மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் கனமழையால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

**இதனிடையே கரூர் மாவட்டம் மாயனூர் காவிரி** கதவணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.

**நாகையில் இன்றுகாலை முதல் பெய்யும் கனமழையால்** விளைநிலங்கள் மழைநீரில் மூழ்கியுள்ளன.

பெரம்பலூரில் மக்காச்சோளம், பருத்தி, நெற்கதிர் வயல்களில் மழைநீர் குளம்போல் தேங்கி காணப்படுகிறது.

❖❖❖❖❖❖❖

**கே.என்.நேரு**

**நெல்லை மாவட்டம் மாஞ்சோலை எஸ்டேட் பகுதி** மக்களுக்காக 11 வகையான சிறப்பு நலத்திட்டங்களை தமிழக அரசு செயல்படுத்தி வருவதாக மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு. கே.என்.நேரு தெரிவித்துள்ளார்.

இப்பகுதி மக்களுடன் இன்று நேரில் கலந்துரையாடி அவர்தம் குறைகளை அமைச்சர் கேட்டறிந்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசியஅவர், இப்பகுதி மக்கள் விரும்பும் இடங்களில் கலைஞர் வீடுகட்டும் திட்டத்தில் முழு மானியத்துடன் வீடுகட்டி கொடுக்கப்படும் என தெரிவித்தார்.

அனைவரும் விரும்பினால் ஒரே பகுதியில் வீடுகள் கட்டிக்கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றார்.

தேயிலை நிறுவனத்திலிருந்து கிடைக்க வேண்டிய நிலுவைத் தொகையை பெற்றுத்தரவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

❖❖❖❖❖❖❖

**கோ.வி.செழியன்**

**தமிழகத்தில் நான்முதல்வன் திட்டத்தின் கீழ் இதுவரை** 27 லட்சம் மாணாக்கருக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்கப்பட்டுள்ளதாக மாநில உயர்கல்வித்துறை அமைச்சர் திரு. கோ.வி.செழியன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் உயர்கல்வி தொடர்பான ஆய்வுக்கூட்டத்தில் பேசியஅவர், போட்டித் தேர்வுகளுக்கு மாணாக்கரை தயார் செய்யும் வகையில் மதுரையில் தொடங்கப்பட்ட பயிற்சி மையம் போல் பிற இடங்களிலும் தொடங்க உள்ளதாக கூறினார்.

உயர்கல்வி படிப்போரின் எண்ணிக்கை மாநிலத்தில் 47 சதவிகிதமாக உயர்ந்துள்ளதை சுட்டிக்காட்டியுள்ள அவர், 2030-ஆம் ஆண்டிற்குள் இதனை 50 சதவிகிதமாக உயர்த்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளதாக தெரிவித்தார்.

தொழில் நிறுவனங்களுடன் இணைந்து நான் முதல்வன் திட்டத்தின் கீழ் திறன்மேம்பாட்டு பயிற்சி வழங்கும் முறைகள் பரிசீலிக்கப்படும் என்பதையும் அமைச்சர் குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖

**ஆர்.என்.ரவி**

**கன்னியாகுமரி மாவட்டம் சாமித்தோப்பு அருகே** தாமரைக்குளம் பகுதியில் அய்யாவழி ஆய்வு மையத்திற்கு தமிழக ஆளுநர் திரு. ஆர்.என். ரவி இன்று அடிக்கல் நாட்டினார்.

❖❖❖❖❖❖❖

**திருவண்ணாமலை**

**திருவண்ணாமலை அருள்மிகு அருணாச்சலேஸ்வரர்** திருக்கோவில் கார்த்திகை மகா தீப திருவிழாவை ஒட்டி நாளை மாலை 6 மணிக்கு 2 ஆயிரத்து 668 அடி உயர மலை உச்சியில் மகா தீபம் ஏற்றப்படும்

இது குறித்து எமது செய்தியாளர்

.. **வாய்ஸ்** ..

**மகா தீபத்திருவிழா மற்றும் பவுர்ணமி** கிரிவலத்தை முன்னிட்டு கும்பகோணம் கோட்ட சார்பில் 850 சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கூட்ட நெரிசலை தவிர்க்க பயணிகள் முன்பதிவு செய்து பயணிக்கலாம் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖

இருவரி

**சிவகங்கை மாவட்டத்தில் வரும் 18-ம் தேதிமுதல்** 21-ம் தேதிவரை ஆட்சிமொழி சட்டவாரம் கடைப்பிடிக்கப்படுவதாக ஆட்சித்தலைவர் திருமதி. ஆஷா அஜித் தெரிவித்துள்ளார்.

**நாமக்கல் மாவட்டத்தில் தனிநபர் வீடுகளில்** பராமரிக்கும் நூலகங்களில் சிறப்பானவற்றிற்கு பரிசுகள் வழங்கப்படவுள்ளதாக ஆட்சித்தலைவர் டாக்டர் உமா தெரிவித்துள்ளார்.

**ஈரோடு மாவட்டம் புஞ்சை புளியம்பட்டி கால்நடை** சந்தையில் இன்று ஒருகோடி ரூபாய்க்கு கால்நடைகள் விற்பனையானதாக வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

❖❖❖❖❖❖❖

ஸ்குவாஷ்

**ஹாங்காங்கில் நடைபெறும் உலக ஸ்குவாஷ்** சாம்பியன்பட்ட போட்டிகளின் ஆடவர்குழு காலிறுதியில் இந்தியா - பிரான்ஸை இன்று எதிர்கொள்கிறது.

இதேபோல் மகளிர் காலிறுதியில் இந்தியா - அமெரிக்காவுடன் மோதுகிறது.

❖❖❖❖❖❖❖

ஹாக்கி

**மஸ்கட்டில் மகளிர் ஜுனியர் ஆசியகோப்பை ஹாக்கி** கடைசி லீக் ஆட்டத்தில் இந்தியா இன்று தாய்லாந்தை எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖

பேட்மிட்டன் - **World Tour Final**

**சீனாவில் நடைபெறும் உலக பேட்மிட்டன்** மகளிர் இரட்டையர் இறுதிபோட்டியில் இந்தியாவின் ட்ரீஸா ஜாலி, காயத்ரி கோபிசந்த் இணை - மலேசிய இணையை இன்று எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖

பேட்மிட்டன்

**கட்டாக்கில் நடைபெறும் ஒடிசா மாஸ்டர்ஸ்** பேட்மிட்டன் கலப்பு இரட்டையர் காலிறுதிக்கு இந்தியாவின் சதீஷ்குமார் கருணாகரன் - ஆதியா இணையும்,

ரோஹன் கபூர் - ருத்விகா ஷிவானி இணையும் இன்று முன்னேறியுள்ளது.

❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.